# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.72 /2016**

திரு. K. யுவராணி,
எண்.13, வடிவுடையம்மன் நகர்,
மணலி புது நகர்,
சென்னை–600 103. .... மேல் முறையீட்டாளர்

எதிர்

உதவி பொறியாளர் / இ&ப,
மணலி புது நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/வடக்கு ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அந்தோணியார் சர்ச் அருகில்,
மணலி புது நகர், சென்னை–103. ..... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 22.3.2017**

1. திருமதி கே.யுவராணி, மணலி புது நகர், சென்னை–103 அவர்களின் 15.09.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.72/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர் அவர்களுடைய மின் உபயோக காலநேர அட்டவணையை பரிசீலித்து 60 நாட்களுக்கு எத்தனை யூனிட்டுகள் ஆகும் என்பதை கணக்கீடு செய்து அவரிடம் 5/2016 கணக்கீடு காலத்திற்கு அதிகமாக வசூல் பண்ணிய தொகையை திரும்ப தரவேண்டும் என்றும் மின்அளவியை மாற்றி தரும்படியும் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் உதவி பொறியாளர்/இப/மணலி புதுநகர் சென்னை மின்பகிர்மான வட்டம்/வடக்கு அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை

எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 23.9.2016 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர், சென்னை மின்பகிர்மான வட்டம்/வடக்கு அவர்கள் தன்னுடைய 3.12.2016 நாளிட்ட பதிலுரையை சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 6.12.2016 அன்று நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 6.12.2016 அன்று அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டதால் கேட்புரை தள்ளிவைக்கப்பட்டு 15.12.2016 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

6. ஆனால், 15.12.2016ல் கேட்புரையில் இருதரப்பினரும் கலந்துகொள்ளவில்லை. மேல்முறையீட்டாளர் தன்னுடைய 22.12.2016 நாளிட்ட மனுவில் வேறு நாளில் கேட்புரையை நடத்தவேண்டும் என்று கோரினார். எதிர்மனுதாரர் உதவி பொறியாளர், மணலி புதுநகர் அவர்களும் வார்தா புயலின் காரணமாக ஏற்பட்ட மின்தடையை சரிசெய்ய வேண்டியது இருந்ததால் 15.12.2016ல் கேட்புரையில் கலந்து கொள்ள முடியவில்லை என்றும் எனவே, வேறு நாளில் கேட்புரையை நடத்த வேண்டும் என்று கோரியிருந்தார். எனவே, இருதரப்பினரின் கோரிக்கைக்கு இணங்க கேட்புரை 12.1.2017 அன்று நடத்தப்பட்டது.

7. 12.1.2017ல் நடந்த கேட்புரையின் பொழுது மின்அளவியின் பதிவு இறக்கம் செய்யப்பட்ட விபரங்களை சமர்ப்பிக்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

8. உதவி பொறியாளர்/மணலி புதுநகர் அவர்கள் 25.1.2017 அன்று மேற்கண்ட மின்இணைப்பு எண்.014–001–781ன் மின்அளவியின் பதிவு இறக்கம் செய்யப்பட்ட விபரங்களையும் அவரின் எழுத்துப்பூர்வமான வாதுரையும் சமர்ப்பித்தார்.

9. மேல்முறையீட்டாளர், தன்னுடைய 2.2.2017 நாளிட்ட கடிதத்தில் மின்னளவி பதிவிறக்கத்தை சுட்டிக்காட்டி வாதமோ விசாரணையோ நடத்துவதும் தொடர்வதும் ஏற்புடையது அல்ல என்று தெரிவித்து மேற்கண்ட வழக்கை முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் என்று பரிந்துரைக்கிறேன் என்று தெரிவித்திருந்தார்.

10. 24.3.2017 அன்று மேலும் ஒரு கேட்புரை நடைபெறும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது.

11. இதற்கிடையில் மேல்முறையீட்டு மனு எண்.72/2016–ன் மேல்முறையீட்டாளரான திருமதி.கே. யுவராணி அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்து அவரின் 03.03.2017 நாளிட்ட கடிதத்தை மின்குறை தீர்ப்பாளரிடம்

சமர்ப்பித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ஒழுங்குமுறை விதிகள் 2004 இன் விதி 20.1 ன் படி இணக்கமான தீர்வு மேற் கொள்ள வேண்டுமென தங்களின் அறிவுறுத்தலை கவனத்துடன் ஏற்றுக்கொண்டு இது குறித்து நான் இனி எந்த விதமான மேல் நடவடிக்கையும் தொடராமல் வழக்கு மற்றும் முறையீட்டிலிருந்து முழுவதுமாக விலகி கொள்கிறேன் என்று தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 12.01.2017 அன்று நடந்த இரு தரப்பு விசாரணை நடந்து முடிவுற்றது. அன்றே எனது பிரதிநிதி விசாரணை மேலும் தொடர வேண்டாமென்றும் இத்துடன் விசாரணையை முடித்து விட வேண்டுதல் கோரியுள்ளார். எனவே தயை கூர்ந்து அணைத்து வழக்கு மற்றும் விசாரணையை இறுதி வடிவாக்கம் கொணர்ந்து உடனடியாக தொடருந்துதல் ஏதுமின்றி முடித்து விடக் கடவது என்று பணிவுடன் விழைகிறேன்.”*

12. மேல்முறையீட்டாளர், தனது 03.03.2017 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீடு குறித்து இனி எந்தவிதமான மேல் நடவடிக்கையும் தொடராமல் வழக்கு மற்றும் முறையீட்டிலிருந்து முழுவதுமாக விலகி கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.72/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. K. யுவராணி,
எண்.13, வடிவுடையம்மன் நகர்,
மணலி புது நகர்,
சென்னை–600 103.

2) உதவி பொறியாளர் / இ&ப,
மணலி புது நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/வடக்கு ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அந்தோணியார் சர்ச் அருகில்,
மணலி புது நகர், சென்னை–103.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம் /வடக்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
5ஏ பிளாக், 144, அண்ணா சாலை,
சென்னை—600 002.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.